உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும். அப்படி வாய்ப்புகள் இருந்தால் இது சம்பந்தமான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 48, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

48—

நாகப்பட்டினம் கடலோரப் பகுதியில் உயர்ரக மின் கம்பிகள் அமைத்தல்.

*16282—திரு. ஆர். கோடிமாரி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் கடலோரப் பகுதிகளில் புயல் காலங்களில் மின்சாரக் கம்பிகள் அறுந்து, அதனால் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கம்பிகளை மாற்றி உயர்ரகக் கம்பிகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : புயல் காற்று வீசும் நேரங்களில் கடலோரப் பகுதிகளில் மின் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதால் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு தவிர்க்கப்படுகிறது. எனினும், நாகை கடலோரப் பகுதிகளான நம்பியார் நகர், வேளாங்கன்னி பகுதிகளுக்குட்பட்ட நாலுவேதபதி, விழுந்தமாவடி, கிச்சாங்குப்பம் மற்றும் செருதூர் பகுதிகளில் பழுதடைந்த மொத்தம் 21 மின் கம்பங்களையும் 1.5 கி.மீ. நீள மின் கம்பிகளையும் மாற்ற ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ. 72,000 செலவில் இவை அனைத்தும் மாற்றப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். கோடிமாரி: மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையில் இந்த நிதியாண்டில் 72 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக மின் கம்பிகள் மற்றும் பழுதடைந்த சாமான்களை மாற்றியிருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும் சாலை

ஓரத்தில் மட்டும் மாற்றியிருக்கிறார்கள். ஆனால் மீனவ கிராமங்களில் இன்னும் மாற்றம் செய்யவில்லை. எனவே, அந்த மீனவ கிராமங்களில் எப்போது புதிதாக மின் கம்பிகளை மற்றும் விழுந்து கிடக்கின்ற சாமான்களை மாற்ற ஆவன செய்வார்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் கடலோர மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பகுதிகள் பாதிக்கப்படுகின்றபோது, கடல் காற்று வீசுகின்றபோது—உப்பு அரிக்கின்ற காரணத்தால் மின்கம்பிகள் எல்லாம் மிக விரைவில் பழுதடைகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது புயல் காற்றும் சேர்ந்து அடிக்கின்றபோது—அடிக்கடி இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. இது சம்பந்தமாக நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு ஆய்வு செய்து அந்தப் பகுதிகளில் கடலோர மாவட்டங்களில் அலுமினிய அலாய்டு கண்டக்டர்ஸ் என்ற ஒரு புதிய மின் ஊட்டிகளை மாற்றிச் செய்தால் பிற்காலத்தில் இந்த மாதிரி பிரச்சினை வராது என்று ஒரு ஆய்வைச் செய்திருக்கிறார்கள். அதற்கு அதிக அளவில் நிதி தேவைப்படுகின்ற காரணத்தால் உலக வங்கித் திட்டத்தின் கீழ் அதைச் சேர்த்து கடலோர மாவட்டங்கள் முழுவதும் இந்தக் கம்பிகளை மாற்ற வேண்டும் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கான புரபோசலை நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் சில பகுதிகள் விடுபட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதிகளை என்னுடைய கவனத்திற்கு எழுத்து மூலம் அவர்கள் தருவார்களானால் உடனடியாக அந்தப் பகுதிகளில் உள்ள மின் கம்பிகளை மாற்றுவதற்கு, மின்சாரக் கம்பங்களை புதிதாக நடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 22—7—1991-ல் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவ கிராமமான நம்பியார் கிராமத்தில் 5 வயதானவன் சத்தீஷ் 1 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் பள்ளிக்குச் செல்லும்போது அந்த மாணவன் மீது மின் கம்பிகள் அறுந்து விழுந்து இறந்துள்ளான். மற்றும் தொடர்ந்து மின் கம்பிகள் அறுந்து விழுந்துகொண்டு இருக்கின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து இந்த நிதி ஆண்டில்—நாகூரிலிருந்து விழுந்தாமாவடி வரை கடலோரப் பகுதியாக இருப்பதால், வருடத்திற்கு ஒரு புயல் வருவதால், அந்த மின்கம்பிகள் அலுமினியமாக இருப்பதால், உப்புக்காற்று பட்டு அந்தக் கம்பிகளானது அடிக்கடி பலவீனமாகிக் கொண்டு இருப்பதால்—அந்தப் பகுதியில் மட்டும் அந்த மின் கம்பியை, அதாவது அலுமினியக் கம்பியை மாற்றி காப்பர் கம்பிகளைப் போடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

[1994 மார்ச் 19

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதற்கு முன்னாலே கடலோர மாவட்டங்களிலே என்னென்ன செய்யவேண்டுமென்பதற்க, இப்படிப்பட்ட பிரச்சினைகள் அடிக்கடி வருகின்றது என்பது அரசினுடைய கவனத்திற்கு வந்தவுடனேயே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி இந்த அலுமினியம் அல்லாய் கண்டக்டர்ஸ் போட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான திட்டங்களையும் தயாரித்து எதிர்காலங்களில் இந்தப் பிரச்சினை வராமல் செய்ய வேண்டுவென்று சொல்லியிருக்கிறோம். இப்பொழுது, மோசமாக இருக்கிற கம்பிகளை எல்லாம் மாற்றிவிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே கேட்டேன், எந்தெந்தப் பகுதிகளிலே இருக்கிறது என்பதை என்னுடைய கவனத்திற்கு எழுதித் தாருங்கள் என்று. உடனடியாக இருக்கின்ற கம்பிகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக அவர் எழுத்து மூலம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 49, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

49—

மகராசக்கடையில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

*22366—திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரி வட்டம், மகராசக்கடையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கிருட்டிணகிரி வட்டம், மகராசக்கடையில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.